முரசொலி
பாசறை

சென்னை 14.12.2023

**பல்வேறு துறைகளில் தொலைநோக்குப் பார்வையுடன், முத்தமிழறிஞர் கலைஞர் செயல்படுத்திய திட்டங்கள், உருவாக்கிய கட்டமைப்புகள் குறித்து இந்தப் பகுதியில் பார்த்து வருகிறோம். இந்த வாரம் முக்கொம்பு மேலணை தடுப்பணை.**



# இடம் பொருள் கலைஞர் 48



# முக்கொம்பு மேலணை தடுப்பணை

## காவிரியில் ஒரு முத்திரைச் சாதனை!

‘உலகில் உள்ள அணைகளில் இன்றும் உயிரோடு பயன்பாட்டில் உள்ள காலத்தால் மூத்த அணை, கல்லணை’ என்றார் நீரியல் அறிஞர் வா.செ.குழந்தைசாமி. அந்தக் கல்லணை, காவிரியை அணைத்து நிற்கிறது.

குடகு மலையில் பிறந்து, சுமார் 800 கிலோ மீட்டர் தூரம் பயணித்து, பூம்புகாரில் வங்கக் கடலில் கலக்கிறது காவிரி. இந்த காவிரியின் பாதையில் முக்கொம்பும் கல்லணையும் முக்கியமான இடங்கள். திருச்சி மாவட்டத்திலிருந்து மேற்கே 18 கி.மீ தொலைவில் முக்கொம்பு உள்ளது. இங்கிருந்துதான் காவிரி, கொள்ளிடம், காவிரிக்கால் என்று காவிரி மூன்றாகப் பிரிகிறது. இதனால்தான் இந்த இடம் ‘முக்கொம்பு’ என்று பெயர் பெற்றது.



“காவிரி கொள்ளிடமாகப் பிரிந்து ஒரு மாலைபோல் திருவ ரங்கத்தைச் சுற்றி கல்லணையில் மீண்டும் இணைகின்றது. இவை இணையும் இடத்தில் ஒரு அணை கட்ட கரிகாலன் எடுத்த முடிவையும், அதனால் விளையப்போகும் பாசனப் பயன்களை அவர் தொலைநோக்கோடு உணர்ந்ததையும் உலக அறிஞர்கள் வியக்கிறார்கள். காவிரியிலிருந்து பிரியும் இடத்தில், கொள்ளிட ஆற்றுப்படுகை 6 அடி மேடாகவும் போகப்போகச் சரிந்து இணையும் இடத்தில் காவிரியைவிட 6 அடி தாழ்வாகவும் அமைந்துள்ளது.

காவிரியில் நீர் பெருகி அதிகம் வரும் காலங்களில் பெரும் உடைப்புகள் ஏற்பட்டுப் பாதிப்பை உருவாக்குவதோடு தாழ்வானப் பகுதியில் பாய்ந்து வீணாகக் கடலில் கலப்பதுதான் அன்றைய காவிரி சந்தித்த பிரச்சினை. இப்படித்தான் கொள்ளிடம் காலப்போக்கில் உருவாகி, தேவிகோட்டையில் கடலோடு கலக்கின்றது.

திருவரங்கத்தின் கிழக்கே காவிரியின் வடகரையில்தான் அடிக்கடி உடைப்பு ஏற்பட்டது. அதில் பாயும் பெரும் வெள்ளமே கொள்ளிடத்தில் ஓடி வீணாகக் கடலில் கலப்பதைத் தடுக்கவே கரிகாலன் அணை கட்ட முடிவு செய்தான்” என்று தனது **‘திருச்சி: ஊறும் வரலாறு’** என்ற புத்தகத்தில் குறிப்பிடுகிறார் **கவிஞர் நந்தலாலா**.

கரிகாலனின் தொலைநோக்குக்கு நிகரானது நம் முத்தமிழறிஞர் கலைஞரின் தொலைநோக்கு. காவிரி வரலாற்றில் கலைஞருக்கு இருக்கும் எத்தனையோ பெருமைகளில் ஒரு சோற்றுப் பதமாக எழும்பி நிற்கிறது முக்கொம்பு மேலணையில் கட்டப்பட்டுள்ள தடுப்பணை.

### கலிங்குலாவும் காட்டனும்

முத்தமிழறிஞர் கலைஞர் கட்டிய அந்தத் தடுப்பணையின் பெருமை நமக்குப் புரிய வேண்டுமானால், கல்லணைக்குச் சிறப்பை ஏற்படுத்திய ஆர்தர் காட்டன் எனும் இங்கிலாந்து பொறியியல் மேதையின் உழைப்பையும் நாம் கொஞ்சம் தெரிந்துகொள்ள வேண்டும்.

“கரிகாலன் கட்டிய கல்லணை இன்றுள்ள நீர்த்தேக்க அணையாகக் கட்டப்படவில்லை. மாறாக நீர் வழியும் அணையான ‘கலிங்குலா’ (CALINGULA) ஆகவே கட்டப்பட்டது. இதனால்தான் நம் இலக்கியங்கள் அதை அணை என்று சொல்லாமல் ‘கரை’ என்றே புகழ்ந்தன... கரிகால் சோழனால் கட்டப்பட்ட அந்தத் தடுப்பணையாம் ‘கலிங்குலா’வை இன்று நாம் பார்க்கும் வடிவத்தில் கட்டி ‘கல்லணை’ என்று நாம் கொண்டாட காரணமானவர் அந்த நீரியியல் மேதை ஆர்தர் காட்டனே” என்கிறார் நந்தலாலா.

கரிகாலன் கட்டிய கல்லணையில், காலப்போக்கில் ஒரு பிரச்சினையைச் சந்தித்தது. முக்கொம்புப் பகுதியில் காவிரி பாயாமல், கொள்ளிடத்தில் சென்று நீர் வீணானது. அதற்குக் காரணம், காவிரியில் ஏற்படும் அதிக நீர்வரத்தால், வண்டல் மண் கல்லணைக்கு முன்பாகக் குவிந்து, மேடாகியது. இதனால் கொள்ளிடம் பள்ளமாகியது. இதன் விளைவாக காவிரிப் பாசனப் பகுதி வறண்டது. இதிலிருந்து டெல்டாவை மீட்க நினைத்த காட்டன், கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே ஓர் அணையைக் கட்டினார்.

இவ்வாறு காவிரியில் கரிகாலனும் காட்டனும் ஏற்படுத்திய அணைகளுக்குப் பிறகு, மீண்டும் ஓர் அணையைக் கட்ட வேண்டிய தேவை ஏற்பட்டது. அது கலைஞரால் நிறைவேற்றப்பட்டது.

### வெள்ளத்தைத் தடுத்த தடுப்பணை

காவிரியில் அதிக நீர் வரவு ஏற்படும் காலங்களில், காட்டன் கட்டிய அணையாலும் டெல்டா பகுதியில் காலப்போக்கில் வெள்ளச் சேதங்கள் ஏற்பட்டன. 1961-ஆம் ஆண்டில் காவிரியில் ஏற்பட்ட மிகப்பெரிய வெள்ளம், டெல்டா பகுதி மக்களுக்கும் விவசாயத்துக்கும் கடுமையான பாதிப்புகளை ஏற்படுத்தியது. அப்போது வெள்ள நிவாரணப் பணிகளுக்கு மட்டுமே 2 கோடி ரூபாய் செலவிடப்பட்டது.

1967-ஆம் ஆண்டு, தி.மு.க. ஆட்சிப் பொறுப்புக்கு வந்தவுடன், மீண்டும் இத்தகைய வெள்ளச்சேதம் ஏற்படாத வகையில், 1973-1974-ஆம் ஆண்டில் முக்கொம்பு மேலணைப் பகுதியில் காவிரியின் குறுக்கே ரூ.2.12 கோடி செலவில் முதலமைச்சர் கலைஞர் அவர்களால் ஓர் அணை கட்டப்பட்டது. இதற்காக 1973-ஆம் ஆண்டு அக்டோபர் 30-ஆம் தேதியிடப்பட்ட அரசாணை பல்வகை எண்: 1672 வெளியிடப்பட்டு, 1974 மே 2 அன்று, கலைஞர் அவர்களால் ஒரு தடுப்பணைக்கு அடிக்கல் நாட்டப்பட்டது. இந்த அணை கட்டப்பட்டுக் கொண்டிருக்கும்போதே நெருக்கடி நிலையால் ஆட்சி கலைக்கப்பட்டு, 1977- இல் பயன்பாட்டுக்கு வந்தது.

### அகண்ட காவிரி... இரண்டாவது அணை..!

இந்த அணை குறித்து, தனது **‘கலைஞர் செதுக்கிய தமிழகம்’** என்ற நூலில் புலவர் முத்து. வாவாசி குறிப்பிடும்போது, “காவிரி நீர்ப்பாசன வரலாற்றில் ஒரு முத்திரைச் சின்னமாக, கலைஞர் அரசு கட்டிய இந்த அணை, மேட்டூர் அணைக்கு கிழக்கே, ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் சோழ மாமன்னன் கரிகாலன் கட்டி வைத்துள்ள கல்லணைக்கு முன்பாக, இரண்டாவது அணையாகக் கட்டப்பட்டதாகும்” என்கிறார்.

மேலும் அவர் கூறும்போது,“அகண்ட காவிரியில், கலைஞர் அரசினால் கட்டப்பட்ட இந்த அணைக்கட்டு காவிரியின் மிகை நீரையும், ஈரோடு மாவட்டம், காவிரி பவானி கூடுதுறையில் காவிரியாற்றுடன் சேரும் பவானியாறு மூலம் காவிரிக்குக் கிடைக்கும் மிகை நீரையும் தேக்கி வைப்பதற்கும், டெல்டா பகுதியில் அடிக்கடி ஏற்பட்டு வந்த வெள்ளச் சேதங்களைத் தடுப்பதற்கும், **‘தமிழகத்தின் நெற்களஞ்சியம் தஞ்சை மாவட்டம்’** என வழங்கப்பட்டு வந்த புகழை நிலைநிறுத்துவதற்கும் காரணமாக அமைந்து, வரலாற்றில் முத்தமிழறிஞர் கலைஞரின் புகழ்பாடும் நிலைக்களன்களில் ஒன்றாகவும் நின்று திகழ்கிறது” என்கிறார்.

காவிரிப் பாசன வரலாற்றில் கரிகாலன், காட்டன் ஆகியோருக்குப் பிறகு கலைஞரை வைக்க எந்த வரலாற்றாசிரியர் தவறினாலும், காலம் கலைஞரைக் கொண்டாடத் தவறாது..!

**...வலம் வருவோம்**

> காவிரியில் தடுப்பணை கட்டியது, காவிரி நடுவர் மன்றம் அமையக் காரணமாக இருந்தது உள்ளிட்ட சாதனைகளின் வரிசையில், அவரது ஆட்சி காலத்தில்தான் வரலாற்றில் முதன்முறையாக 1997-1998 ஆம் ஆண்டில், 82.14 கோடி ரூபாய் செலவில் நாகை, திருவாரூர், தஞ்சை மாவட்டங்களில் காவிரி கழிமுகப் பகுதி வாய்க்கால்களில் தூர்வாரப்பட்டது. இதன் காரணமாக, அந்தப் பகுதிகளில் அதிக பரப்பளவில் சாகுபடி செய்ய முடிந்தது. விளைச்சலும் அதிகமாகக் கிடைத்தது.

---

## பயன் தரும் மழைநீர் வடிகால்!

“சென்னையின் மழைநீர் வடிகால் வேலை செய்கிறது. 2015-இல் எங்கள் பகுதியில் மழை நீர் வடிகால் இல்லை. அதனால், சப்மரைன் மோட்டார் வைத்துத் தான் மழைநீரை வெளியேற்றினோம். சப்மரைன் மோட்டார் ஒருநாள் முழுவதும் ஓடினால், மழைநீர் வடிகால் வழியாக வெள்ளநீர் இயல்பான புவி ஈர்ப்பு விசை யால் இரண்டு மணி நேரத்தில் ஓடிவிடும்.

இந்த முறை பல இடங்களில் மழைநீர் வடிகால் நிரம்பி, அதற்கும் மேல் வெள்ளம் ஓடியது. அடையாறு கடலில் கலக்கும் இடத்தில் நிறைய பிளாஸ்டிக் கழிவுகள், கடல் சீற்றத்தால் வெள்ளத்தைக் கடல்நீர் உள்வாங்காமல் (கிட்டத்தட்ட ஒருநாள்) இருந்ததால் பல இடங்களில் சாலையை ஜேசிபி வைத்து வெட்டி பள்ளமாக்கி மழைநீரை வெளியேற்றினார்கள்.

கடைசியாக, எங்கள் தெருவிலிருந்த நீர், மழைநீர் வடிகால் வழியாகவே வெளியேறியது. 2015-இல் மூன்று வாரங்கள் (21 நாட்கள்) ஆனது. இப்போது ஏழு நாட்கள். இதைக்கூட வரும்காலங்களில் குறைக்கலாம். இனி சென்னையில் புதிதாகக் கட்டப்படும் அடுக்குமாடிக் குடியிருப்புகளில் தரைதளத்துக்கு அனுமதி இல்லை என்று கொண்டுவரலாம். குறிப்பாக ஏரி, குளங்களின் அருகே சட்டவிரோதமாகக் குடியிருக்கும் மக்களைக் கடுமையாக அங்கிருந்து வெளியேற்றவேண்டும். இன்றுகூட ஏதோ ஒரு ஏரி அருகே இருந்த மக்கள் அவர்கள் வீட்டுக்குள் நீர் வரக்கூடாது என்று நள்ளிரவில் ஏரிக்கரையை உடைத்து விட்டார்களாம். மர்மநபர்கள் ஏரியை உடைத்துவிட்டார்கள் என்று செய்தி வருகிறது.

-எழுத்தாளர் விநாயக முருகன்
ஃபேஸ்புக் பதிவு

---

## ஃப்ளாஷ்பேக்



## ‘கருணாநிதி’ வீட்டில் பெரியார்!

என் தாத்தா திருவரங்கம் சு.தங்கையன் அவர்கள், நீதிக்கட்சி காலம்தொட்டே இயக்கப் பணி செய்து வந்தவர். 1970-இல் திருச்சி மாவட்டம், திருவரங்கம் தேவிப்பள்ளியில் திராவிடர் கழக மாநாட்டில் பங்கேற் பதற்காக தந்தை பெரியார் அவர்கள் வருகை தந்தார். அப்போது என் தாத்தா உடல்நலக் குறைவால் பாதிக்கப்பட்டிருந்ததை அறிந்து, அவரை வந்து சந்தித்து, நலம் விசாரித்துச் சென்றபோது இப்படம் எடுக்கப்பட்டது. இன்று வரை இருவரது நட்பினை பறைசாற்றும் பட மாகவும் எங்கள் இல்லத்தை அலங்கரிக்கும் படமாகவும் இது விளங்குகிறது.



கருணாநிதி

**-திருவரங்கம் மு.கருணாநிதி,**
**துணை அமைப்பாளர்,**
**திருச்சி மத்திய மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473, மின்னஞ்சல் youthwing@dmk.in

---


## கருவூலம்

### இரண்டாவது முறையாக தலைவர்

**1974-ஆம் ஆண்டு, கழகத்தின் வெள்ளிவிழா கொண்டாட்டம் நடை பெற்றது. கழகத் தலைவராக கலைஞர் இரண்டாவது முறையாகத் தேர்வானார். கலைஞர் எழுதிய ‘ரோமாபுரி பாண்டியன்’, ‘மேடையில் வீசிய மெல்லிய பூங்காற்று’ ஆகிய நுல்கள் வெளி யிடப்பட்டன. அந்த ஆண்டுதான் சட்டமன்றத்தில் மாநில சுயாட்சி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. சிட்டிபாபுவின் ‘கழகக்குரல்’ ஏடு வெளியிடப்பட்டது.**

---

# திராவிடத்தால் வாழ்கிறோம் 328




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131